**பள்ளிக் கல்வித் துறை**

1. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் பள்ளிக் கல்வித் துறை முக்கிய பங்கு வகிக்கும்.
2. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் குறித்த தகவல்கள் மற்றும் தேவையான உத்தரவுகளையும் அனைத்து கல்வி மாவட்டங்கள் மற்றும் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் .
3. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகளில் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைதலை தொழில்முனைதலை வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் எடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருக்கும்.
4. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு , பயனளிக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் கருத்துப்பட்டறைகளை நடத்துவதற்கு அவர்களின் அதிகார வரம்பில் உள்ள பள்ளிகளுக்கு அனுமதி வழங்கும்.
5. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தில் பள்ளிகள் பங்கேற்பதை உறுதி செய்ய அவர்களின் இயக்குனரகங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குதல். பள்ளிகள் பங்கேற்பதற்கு ஊக்குவிப்பதற்காக முதன்மை கல்வி அலுவலர்கள்/மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல் , புத்தாக்க கண்டுபிடிப்பு அணிகளை அடையாளம் காணுதல் மற்றும் ஆசிரியர்களுக்கான திட்ட விளக்க பயிற்சிக்கான அட்டவணை தயாரிக்க வலியுறுத்தல் போன்ற பணிகளை செய்யும்.
6. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் விழிப்புணர்வு மற்றும் அடுத்த கட்டங்களில் பங்கேற்க மாணவர்களை ஊக்குவிக்கும்.
7. மாணவர் அணிகளை உருவாக்குதல் புத்தாக்க சிந்தனைகளை கண்டறியும் (ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 5 அணிகள்).
8. புத்தாக்க சிந்தனை அடிப்படையில் 10 சிறந்த அணிகளை தேர்வு செய்ய மாவட்ட அளவிலான தேர்வுக் குழுவை உருவாக்குவர்.
9. கல்வி சேனலில் பள்ளி மேம்பாடு மற்றும் புத்தாக்கம் குறித்த விழிப்புணர்வு காணொளி ஒளிபரப்பு செய்ய இயக்குநர்- மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலிடம் (SCERT) ஒப்புதல் பெறுதல் மற்றும் விழிப்புணர்வு காணொளிகளை அவர்களிடம் ஒப்படைப்பு செய்தல்.
10. பள்ளிகளில் அதிக அளவில் அடல் டிங்கரிங் ஆய்வகங்களை (ATLs) உருவாக்கும்.

**முதன்மை கல்வி அலுவலரின் பொறுப்புக்கள்**

1. மாவட்ட கல்வி அலுவலர்கள் மற்றும் பள்ளிக் கல்வித் துறையில் உள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் இந்த திட்டத்திற்கான பொறுப்பு அதிகாரியாக முதன்மை கல்வி அலுவலர் செயல்படுவார்.
2. அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய விரிவான வழிமுறைகளை முதன்மை கல்வி அலுவலர் பள்ளிகளுக்கு வழங்குவார்.
3. முதன்மை கல்வி அலுவலர் தங்களது மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளிலும் வழிகாட்டி ஆசிரியர் நியமனம் மற்றும் திட்ட விளக்கப் பயிற்சி மற்றும் பள்ளி அளவிலான போட்டி நடத்துவதை உறுதி செய்வார்.
4. முதன்மை கல்வி அலுவலர் மாவட்ட அளவிலான துவக்க முகாமை ஏற்பாடு செய்வார்.
5. வழிகாட்டி ஆசிரியர் , மாணவர் அணிகளின் விவரங்கள் மற்றும் மாவட்ட அளவில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் இணைய – தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுவதை முதன்மை கல்வி அலுவலர் உறுதி செய்வார்.
6. மாவட்டம் மற்றும் மாநில அளவில் இறுதிப் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவர்களைப் பற்றிய தகவலை அந்தந்த பள்ளிகளுக்கு முதன்மை கல்வி அலுவலர் தெரிவிப்பார்.
7. தகுதியுள்ள மாணவர்கள் , இறுதி போட்டியில் பங்கேற்பதை உறுதி செய்து அந்தந்த பள்ளி வழிகாட்டி ஆசிரியர்கள் அழைத்துச் செல்வதை உறுதி செய்வார்.

**தலைமை ஆசிரியர் / ஆசிரியையின் பொறுப்புக்கள்**

1. மாணவர்களை கொண்டு மாநிலத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கிய பங்களிப்பினை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் .
2. தலைமை ஆசிரியர் / ஆசிரியை , பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான தொலைநோக்கு தலைவராக ஒட்டு மொத்த அணியையும் வழி நடத்த வேண்டும் .
3. போட்டிகளை நடத்துவதற்கு வழிகாட்டி ஆசிரியருக்கு நல்ல வழி நடத்துதலும் ஒத்துழைப்பும் வழங்க வேண்டும்.
4. இந்த முழு திட்டத்திலும், பெற்றோர் ஆசிரியர் சங்கம் மிகவும் ஆக்கப்பூர்வமான உதவிகள் செய்வதை உறுதிப்படுத்த வேண்டும்.

முதன்மை கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்

**வழிகாட்டி ஆசிரியர்களின் பொறுப்புக்கள்**

1. வழிகாட்டி ஆசிரியர்கள் ஒரு நாள் ( One Day) திட்ட விளக்கப் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும் . அதன் பின் அவர்கள் திட்டம் குறித்து மாணவர்களுக்கு விளக்க வேண்டும்.
2. வழிகாட்டி ஆசிரியர்கள் மாணவர்களின் தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் குழுக்களை உருவாக்க வேண்டும்.
3. வழிகாட்டி ஆசிரியர்கள் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்த அனைத்து ஆசிரியர்களையும், இந்த திட்டத்தில் பங்கேற்கவும் ஒருங்கிணைக்கவும் ஊக்குவிக்க வேண்டும்.
4. வழிகாட்டி ஆசிரியர்கள் தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுடன் ஒருங்கிணைந்து மாணவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும்.
5. வழிகாட்டி ஆசிரியர்கள் தொழில் வல்லுநர்கள் , தொழில்முனைவோர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்க ஆதரவுடன் பள்ளி அளவிலான புத்தாக்க கண்டுபிடிப்பு போட்டிகள் நடத்தி சிறந்த 5 அணிகள் தேர்வு செய்யப்பட வேண்டும்.

6. மாவட்டம் மற்றும் மாநில அளவிலான போட்டிகளுக்கு வழிகாட்டி ஆசிரியர்கள் மாணவர்களுடன் செல்ல வேண்டும் மற்றும் அவர்களின் பயணத்தின் போது அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்ய அவர்களோடு தங்க வேண்டும்.
7. வழிகாட்டி ஆசிரியர்கள் இணையத்தளத்தில் போட்டிக்கான அனைத்து நடவடிக்கைகளின் விவரங்களையும் பதிவேற்றுவதற்கு பொறுப்பாவார்கள்.

**ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசர நிதியம் UNICEF:**

1. பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான அறிவுசார் பங்கு நிறுவனமாக UNICEF செயல்படும். மேலும் பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத்திட்ட அனைத்து செயல்பாடுகளுக்கும் இணையதள பக்கத்தினை வழங்கி உதவிகள்புரியும்
2. UNICEF, தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் தொழில்முனைவோர் விழிப்புணர்வு உள்ளடக்கிய வீடியோ வடிவிலான பாடத்திட்டங்களை இணையத்தளம் வழியாக மாணவர்களுக்கு வழங்கி புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு பற்றிய யோசனைகளை உருவாக்குவர்.
3. ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்சிப் பாடத்திட்டங்களை UNICEF தயார் செய்யும்.
4. பயிற்றுனர்களுக்கான பயிற்சி ( Master Trainers Training) போன்ற திறன் வளர்ப்பு பயிற்சிகள் அனைத்து அலுவலர்களுக்கும் அதாவது (முதன்மை பயிற்சியாளர்கள்) UNICEF வழங்கும்.
5. UNICEF மாவட்டங்கள் மற்றும் மாநில அளவில் அனைத்து வகையான பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத்திட்டத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் பங்கேற்று வழிகாட்டுதல் செய்யும்.
6. UNICEF பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத்திட்டத்திற்கான இணையதளத்தை பள்ளி கல்வித்துறை இணையத்தளத்தில் உருவாக்கி பராமரிக்கும்.
7. மாநில மற்றும் கள ஒருங்கிணைப்பு முகமைகளுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல். மூன்று நிலைகளில் கண்டுபிடிப்புகளை தேர்ந்தெடுக்க UNICEF உதவிகள் புரியும்.
8. அனைத்து சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்கு ஒரு நாள் திட்டப் பயிற்சி வழங்கப்படும்.